தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**5 வயதுப்பிரிவு**
(01.01.2016 – 31.12.2016 வரையில் பிறந்தோர்)

## நல்லொழுக்கம்

ஒழுக்கம் எம் உயிரை விட உயர்ந்தது. முதலில் பெற்றோரும், பள்ளிக்குச் செல்லும் போது ஆசிரியர்களும் எமக்கு நல்ல ஒழுக்க நெறிகளைச் சொல்லித் தருகிறார்கள். நாம் அவற்றைப் பின்பற்றி வாழ வேண்டும்.

அன்பு செய்தல், நன்றி மறவாமை, பெரியோரை மதித்தல், இன்சொல் பேசுதல், அறங்காத்தல் போன்றவை நல்லொழுக்கங்கள். எமது வாழ்வின் எல்லா நிலையிலும் நாம் இவற்றைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும்.

ஒழுக்கத்தின் நெறி நின்று வாழ்ந்து காட்டுபவர் எங்கள் தலைவர் மாமா. அவர் வழியில் இறுதிவரை நின்றவர்கள் மாவீரர்கள். இவர்கள் எமக்கு வழிகாட்டியாக உள்ளார்கள். நாமும் அவ்வாறே வாழ்ந்து, எமது இனத்திற்கும் தாய்நாட்டிற்கும் பெருமை சேர்ப்போம்.

நன்றி,
வணக்கம்.